## பிரதம மந்திரி ஃபசல் பீமா யோஜனா

மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ளவும் கிசான் கால் சென்டர் : 14447 அருகிலுள்ள வேளாண்மை அலுவலகம், பொது சேவை மையம் (CSC), வங்கி அல்லது காப்பீட்டு முகவர், மேலும் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்கள், காப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் உங்கள் கிராமத்தில் திட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கான கடைசி தேதி ஆகிய தகவல்களையும் பெறலாம்.

### அதிகமாக அறிந்து கொண்டால் அதிக பலன்களை பெறலாம்

**பிரதம மந்திரி பயிர்க் காப்பீடுத் திட்டம் (PMFBY) தொடர்பாக விவசாயிகளுக்கு உதவும் கேள்விகள்**

பிரதான் மந்திரி ஃபாசல் பீமா யோஜனா இயற்கை பேரிடர்களில் இருந்து பயிர்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. இந்த இன்சூரன்ஸ் பாலிசியை விவசாயிகளின் வீடுகளுக்கு சென்று வழங்குவதற்காக பயிர் காப்பீடு பாலிசி விநியோகத் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். இப்போது விவசாயிகள் பெருமையோடு "என் பாலிசி என் கையில்" என்று கூறலாம்.




BANK BRANCH | CSC | www.pmfby.gov.in | Cooperative Socity | Agriculture Department | India Post

**Universal Sompo General Insurance**
Suraksha, Hamesha Aapke Saath

8th & 9th தளம் (தெற்கு பகுதி), சர்வதேச வணிக வர்த்தக பூங்கா, ஓபராய் கார்டன் சிட்டி, மேற்கு எக்ஸ்பிரஸ் ஹைவே, கோரேகாவ் கிழக்கு, மும்பை - 400063.
இலவச அழைப்பு எண் : 14447

பிரதம மந்திரி ஃபசல் பிமா யோஜனா என்பது


## பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா
## தமிழ்நாடு அரசு மற்றும் ஒன்றிய அரசின் திட்டம்



**கேள்வி : பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் என்றால் என்ன ?**



**பதில் :** பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்காக விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. எதிர்பாராத இயற்கை நிகழ்வுகளால் பயிர்சேதம் ஏற்படும் போது விவசாயிகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.



**கேள்வி: பயிர் காப்பீட்டை யார் பெற முடியும்?**

**பதில் :** அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களை பயிரிடும் அனைத்து கடன் பெறும் மற்றும் கடன்பெறாத (இணை சாகுபடியாளர் /குத்தகைதாரர்) விவசாயிகளும் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயன்பெறலாம். கடன் பெறும் மற்றும் கடன் பெறாத அனைத்து விவசாயிகளும் விருப்பத்தின் பேரில் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளலாம். உங்கள் பகுதியில் அறிவிக்கை செய்யப்பட்ட

பயிர்கள் மற்றும் பதிவு செய்வதற்கான கடைசி தேதி பற்றிய தகவல்களுக்கு பொது சேவை மையம்(CSC), PMFBY இணையதளம், காப்பீட்டு நிறுவனம் அல்லது விவசாய அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். கடன் பெறும் விவசாயிகள், பதிவு செய்வதற்கான கடைசி தேதிக்கு குறைந்தது 7 நாட்களுக்கு முன்னதாக சம்பந்தப்பட்ட வங்கி கிளைக்கு ஒரு விலகல் படிவம் அல்லது சுய உறுதிமொழியை எழுத்துப்பூர்வமாக

**கேள்வி : பிரதம மந்திரி பயிர்க்காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்படும் தொகை எவ்வளவு ?**



**பதில் :** மாவட்ட தொழில்நுட்பக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட நிதி அளவுகோல் (Scale of Finance) அல்லது மாவட்டத்தின் சராசரி மகசூல் மதிப்பு (National Average Yield), இதில் எது குறைவோ அதுவே காப்பீட்டுத் தொகையாக நிர்ணயம் செய்யப்படுகிறது.

**கேள்வி : பயிர் காப்பீட்டிற்காக விவசாயி செலுத்த வேண்டிய பிரீமியம் விகிதங்கள் யாவை ?**

**பதில் :** காப்பீடு செய்யப்பட்ட தொகையில் காரீப் (குறுவை) பயிர்களுக்கு 2.0%, ரபி (குளிர்காலம்) பயிர்களுக்கு 1.5% மற்றும் பணப்பயிர் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு அதிகபட்சம் 5%

**கேள்வி : பிரதம மந்திரி பயிர்க்காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீடு வழங்கப்படும் நிகழ்வுகள் யாவை ?**



**பதில் :** 1) விதைப்பு / நடவு செய்ய இயலாத நிலை, முளைப்பு இல்லாமை : மோசமான வானிலை மாற்றங்கள் மற்றும் குறைவான மழையால் காப்பீடு செய்யப்பட்ட பகுதிகளில் விதைப்பு / நடவு செய்ய இயலாத நிலை, முளைப்பு இல்லாமை.

2) விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள பயிர்காலம்: வறட்சி, மழையின்மை, வெள்ளம், மழை நீரால் வயல்களில் பயிர் நீரில் மூழ்குதல், பூச்சி மற்றும் நோய் தாக்குதல், நிலச்சரிவு, மின்னலால் ஏற்படும் இயற்கை புயல், சூறாவளி, ஆலங்கட்டி மழை போன்ற இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் மகசூல் இழப்பிற்கு விரிவான காப்பீடு வழங்கப்படும்.

3) அறுவடைக்கு பின் ஏற்படும் இழப்புகள்: அறுவடைக்கு பின் அதிகபட்சம் 14 நாட்களுக்கு வெட்டி பரப்பியோ / சிறிய கட்டுகளாக கட்டியோ வயலில் உலரவைக்கப்பட்டுள்ள பயிர்களுக்கு ஆலங்கட்டி மழை, புயல், புயலினால் ஏற்படும் மழை மற்றும் பருவம் தவறிய மழை போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்கப்படும்.

4) பகுதி சார்ந்த பல்வேறு இயற்கை இடர்பாடுகள்: அறிவிக்கை செய்யப்பட்ட பகுதியிலோ அல்லது அறிவிக்கை செய்யப்பட்ட பகுதி சார்ந்த வயலிலோ, ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, பயிர் நீரில் மூழ்குதல், இடி மின்னலுடன் கூடிய திடீர் மழை, மின்னலால் ஏற்படும் இயற்கை தீ போன்ற நிகழ்வுகளால் ஏற்படும் பயிர் இழப்பிற்கு கள அளவில் தனி நபர் காப்பீடு செய்யப்படுகிறது.

**கேள்வி : கடன்பெறாத விவசாயி இந்த திட்டத்தின்கீழ் காப்பீட்டை எவ்வாறு பெற முடியும் ?**




**பதில் :** பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு பெற விரும்பும் கடன் பெறாத விவசாயிகள் தங்களது அருகிலுள்ள வங்கி கிளை கூட்டுறவு சங்கம் / அங்கீகரிக்கப்பட்ட தரகு நிறுவனங்கள் I பொது சேவை மையம் (CSC) / காப்பீட்டு நிறுவனம் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவரை தொடர்பு கொள்ளலாம் அல்லது நேரடியாக தேசிய பயிர் காப்பீட்டு இணையதளம் www.pmfby.gov.in வாயிலாக உரிய தேதிக்கு முன் ஆன்லைன் விண்ணப்படிவத்தை நிரப்பி அனுப்பலாம்.

**கேள்வி : கடன்பெறும் விவசாயி காப்பீடு செய்த பயிர்களில் மாற்றங்களைச் செய்ய இயலுமா ? எனில் எதுவரை ?**



பதில் : ஆம், கடன்பெறும் விவசாயி காப்பீடு செய்த பயிரில் மாற்றங்களைச் செய்யலாம். மாநில அரசால் காப்பீடு செய்ய நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு 2 நாட்களுக்கு முன்னர் சம்பந்தப்பட்ட வங்கி மூலம் விவசாயிகள் காப்பீடு செய்யப்பட்ட பயிரின் பெயர் மாற்றம் குறித்து தெரிவிக்கலாம்.

**கேள்வி : பயிர் காப்பீட்டைப் பெறுவதற்கு கடன்பெறாத விவசாயி என்னென்ன ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்?**



பதில் : கடன்பெறா விவசாயிகள், நில உரிமை பட்டா ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலர் அடங்கல் (விதைப்பு செய்த பயிர்களுக்கு); சான்றிதழ் (விதைப்பதற்கு முன் காப்பீடு செய்யும் பட்சத்தில், ஆதார் அட்டை நகல் சமீபத்தியது), வங்கிக்கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், முன்மொழிவு விண்ணப்பம், பதிவு விண்ணப்பம் ஆகியவற்றை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும் இணை சாகுபடியாளர் அல்லது குத்தகைக்காரர் எனில் நில உரிமையாளருடனான ஒப்பந்தம் / வாடகை / குத்தகை பத்திரம் போன்றவை கட்டாயமாகவும்.

**கேள்வி : பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட வேண்டிய பகுதி என்றல் என்ன?**

பதில் : பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பகுதி அணுகு முறையின் அடிப்படையில் காப்பீடு செய்யப்பட வேண்டிய பகுதி மாநில அரசால் அறிவிக்கை செய்யப்படுகிறது. பிரதான பயிர்களுக்கு காப்பீடு செய்யப்படும் பகுதி வருவாய் கிராமமாகவோ - கிராம பஞ்சாயத்தாகவோ அல்லது அதற்கு இணையான பகுதிகளாகவோ (உதாரணம் வருவாய் வட்டம்) இருக்கலாம். பிற பயிர்களுக்குக்கான காப்பீடு செய்யப்படும் பகுதி வருவாய் கிராம அளவிலும் / பிர்க்கா அளவிலும் அறிவிக்கை செய்யப்படுகிறது.

**கேள்வி : பகுதி சார்ந்த இயற்கை இடர்பாடுகள் காரணமாக ஏற்படும் பயிர் இழப்பு பற்றி தகவல் தெரிவிப்புதற்கான முறை என்ன?**



பதில் : பயிர்காப்பீடு செய்துள்ள விவசாயி பாதிப்பு நிகழ்ந்த 72 மணி நேரத்திற்குள் காப்பீட்டு நிறுவனத்தின் இலவச அழைப்பு எண் மூலமாகவோ அல்லது பயிர் காப்பீட்டு செயலி மூலமாகவோ அல்லது எழுத்துப்பூர்வமாக வங்கி / வேளாண்துறை அதிகாரிகள் மூலமாகவோ நேரடியாக தகவல் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும். விவசாயியின் பெயர், கைபேசி எண், அறிவிக்கை செய்யப்பட்ட பகுதி வங்கி பெயர், வங்கி கணக்கு எண், இடர்பாட்டின் வகை, பாதிக்கப்பட்ட பயிர்கள் போன்ற தகவல்களை குறிப்பிட வேண்டும்.